உ

சிவமயம்

# மல்லாகம் நீலியம்பனை
# அருள்மிகு முதலி அம்பாள் தேவஸ்தானம்



## வருடாந்த
## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

# பஜனைப் பாடல்கள்

## 12.06.2014

உ

சிவமயம்

# மல்லாகம் நீலியம்பனை

# அருள்மிகு முதலி அம்பாள் தேவஸ்தானம்







## வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

# பஜனைப்பாடல்கள்

## 12.06.2014



# பிள்ளையார் பஜனைப்பாடல்

முந்தி முந்தி நாயகனே பிள்ளையாரே
முக்கண்ணனார் தன் மகனே பிள்ளையாரே
கந்தனுக்கு முன் பிறந்த பிள்ளையாரே
கணபதியே நீ அருள்வாய் பிள்ளையாரே
வேலனுக்கு முன் பிறந்த பிள்ளையாரே
விநாயகனே நீ அருள்வாய் பிள்ளையாரே
பேளை வயிற்றோனே பிள்ளையாரே
பெருச்சாலி வாகனராம் பிள்ளையாரே
பார்பதியாள் பாலகனே பிள்ளையாரே
தொந்தி வயிற்றோனே பிள்ளையாரே
துதி செய்தேன் தோத்தரித்தோம் பிள்ளையாரே
முற்கால் வலமாய் வந்து பிள்ளையாரே
முடிவணங்கித் தென்றனிட்டோம் பிள்ளையாரே
நாற்கால் வலமாய் வந்து பிள்ளையாரே
நமஸ்கரித்துத் தென்றனிட்டோம் பிள்ளையாரே
ஐங்கால் வலமாய் வந்து பிள்ளையாரே
அடிவணங்கித் தென்றனிட்டோம் பிள்ளையாரே
நாவில் குடியிருந்து பிள்ளையாரே பிள்ளையாரே
நல்லோசை தாருமய்யா பிள்ளையாரே
குரலில் குடியிருந்து பிள்ளையாரே
நல்ல குரலோசை தாவப்பா பிள்ளையாரே
சரணம் சரணம் என்று
சரண் அடைந்தோம் திருவடியில் பிள்ளையாரே
சரணம் சரணம் அப்பா - பிள்ளையாரே
உந்தன் திருவடிகள் சரணம் அப்பா - பிள்ளையாரே



## திருமுருகப் பெருமான் பாடல்

வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால்பிடித்தோம் காத்தருள் சண்முகா
உலகநாதன் மருமகனே சண்முகா
ஊமைக்கருள் புரிந்தவனே சண்முகா
ஒய்யாரி வள்ளல் ஓயா சண்முகா
ஓங்காரத் தத்துவமே சண்முகா
ஔவைக்கு உபதேசித்தவா சண்முகா
அகில லோக நாயகனே சண்முகா
அன்பனுக்கு அன்பனே சண்முகா
ஆறுமுக வேலனே சண்முகா
அரணார் திருமகனே சண்முகா
ஆண்டவனே நீ அருள சண்முகா
சஞ்சலங்கள் தீர்த்திடவே சண்முகா
சாமி குரு நாதனே நீ சண்முகா
வள்ளி தெய்வானையுடன் சண்முகா
துள்ளி விளையாடிடவே சண்முகா
தீரா வினைகள் தீர்த்திடவே சண்முகா
மாறா வினைகள் மாற்றிடவே சண்முகா
வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால்பிடித்தோம் காத்தருள் சண்முகா

# முருகன் பாடல்

அரோகரா....... அரோகரா....... அரோகரா....... அரோகரா.....

வள்ளி தெய்வானையோடு மயில்மிகை

துள்ளித் துள்ளி நடாடும் முருகனுக்கு அரோகரா.......

தென்னிலை தினைப்புலத்தில் வள்ளியுடனே அமர்ந்து

கள்ளமாய் மணம்புரிந்த குள்ளன் முருகனுக்கு அரோகரா

தேனும் திணைமாவும் உண்டு தானும் வள்ளியோடு இணைந்து

கானமயில் மீது அமர்ந்த கோனென முருகனுக்கு அரோகரா

தண்டபாணி முருகனுக்கு அரோகரா....

பால தண்டபரி என்ற பெயருடன்

நீல கண்டன் மைந்தன் ஆன முருகனுக்கு அரோகரா

பக்தர்கட்கு சித்தமுடன் அருள் புரி வித்தகனாம்

சக்திவேல் முருகனுக்கு அரோகரா

அனுதினமும் சகமெனவே வழிபடும் அடியவர்க்கு

அருள் புரியும் முருகனுக்கு அரோகரா....

ஏறு மயில் ஏறி விளையாடும் முருகனுக்கு அரோகரா....

ஈசனுடன் ஞானமொழி பேசும் முருகனுக்கு அரோகரா

கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முருகனுக்கு அரோகரா

குன்றுருவ வேல்வாங் நின்ற முருகனுக்கு அரோகரா

மாறுபடு சூரனை வதைத்த முருகனுக்கு அரோகரா

வள்ளியை மணம்புரிய வந்த முருகனுக்கு அரோகரா

அரோகரா....... அரோகரா....... அரோகரா....... அரோகரா.....



# வைரவப் பெருமான்

ஆதி மூலப் பெருமானே ஞான வைரவா
ஆண்டவனே வந்திடப்பா ஞான வைரவா
நீ இல்லாத கோவில் எல்லாம் ஞான வைரவா
அங்கு நிலையில்லாத தெய்வமப்பா ஞான வைரவா
காக்கும் கடவுள் அப்பா ஞான வைரவா
காத்தருள வேண்டுகின்றோம் ஞான வைரவா
சூலம் ஒரு கைபட பிடித்தோம் ஞான வைரவா
சுந்தரனார் தான் வருவா ஞான வைரவா
பத்தினியை கைப்பிடித்தோ ஞான வைரவா
பவனி விளையாடி வாறார் ஞான வைரவா
துன்பம் வரும் வேளையில் ஞான வைரவா
தூக்கி எம்மைக் காப்பவராம் ஞான வைரவா
அந்தரித்த வேளையிலே ஞான வைரவா
அரவணைத்தோ காப்பவராம் ஞான வைரவா
வாறவழி போறவழி ஞான வைரவா
வழித்துணையாய் வந்திடப்பா ஞான வைரவா
குழந்தைகள் செல்லும் வழி ஞான வைரவா
கூடவே வந்திடப்பா ஞான வைரவா
சரணம் சரணம் அப்பா ஞான வைரவா
உந்தன் திருவடிகள் சரணமப்பா ஞான வைரவா

# அம்மன் துதி

ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ ஆரிவரோ
ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ ஆரிவரோ
முதலி அம்மன் தாயாரோ எங்கள் முன்னே வந்திடம்மா
பக்தர் நாங்கள் உன்னிடத்தில் ஓடி வருவோம் வினை தீர்க்க
சிங்கத்தின் மீது அமர்ந்தவளே - எம்மை
சீராய் வாழ வைத்தவளே
சூலமேந்தி வந்தவளே - அந்தச்
சூரனை அழிக்க வைத்தவளே
மண்ணில் உதித்த அம்பிகையே
மங்கையர் மனதில் நிறைந்தவளே
மாற்றம் காண வைத்தவளை - நாங்கள்
மலர்கள் சூடி வணங்கிடுவோம்
மதுரையில் இருப்பவள் நீ அம்மா
மங்கையர்க்கரசியும் நீ அம்மா
அங்கையர்க் கண்ணில் வாராயோ
உன் அருளை என்றும் தாறாயோ
குமரகுருபரன் குரு நீயே
அமரர் இடர்த் தீர்த்த அருள் தாயே
நாயேன் உன் புகழ் பாடிடவே
நல்லருளை என்றும் தந்தருளே
முன்பு நாம் செய்த தவ வினையால்
அன்பு உன் மீது சொரிய வந்தோம்
இன்னும் நாம் படும் வேதனையைத்
தீர்த்து உன் அருள் தருவாயே
உடலின் குறைகளை தீர்க்க வந்தோம்
உள்ளக் குமுறலைக் கூற வந்தோம்
அள்ளக் குறையாத உன் கருணை
வெள்ளத்தினை அள்ளிப் பருக வந்தோம்

# நாகபூசணி அம்மன்

நாவோசை கேட்குதம்மா நாகபூசணி
நல்லவளின் வாசலிலே நாகபூசணி
குரலோசை கேட்குதம்மா நாகபூசணி
கோவிலின் வாசலிலே நாகபூசணி
மணியோசை கேட்குதம்மா நாகபூசணி
மண்டபத்தின் வாசலிலே நாகபூசணி
சங்கு ஓசை கேட்குதம்மா நாகபூசணி
சந்நிதியின் வாசலிலே நாகபூசணி
நாகம் என்ற பாம்பதனை நாகபூசணி
நகை ஆகப் பூண்டவளாம் நாகபூசணி
சேடன் என்ற பாம்பதனை நாகபூசணி
திருக்கழுத்தில் பூண்டவளாம் நாகபூசணி
நாகம் குடை பிடிக்க நாகபூசணி
நல்நாகம் தலையாட்ட நாகபூசணி
சேடன் குடை பிடிக்க நாகபூசணி
செம்பருந்து தாலாட்ட நாகபூசணி
ஒரு தலை நாகம்மா நாகபூசணி
ஓடி விளையாடுதம்மா நாகபூசணி
இரண்டு தலை நாகம் அம்மா நாகபூசணி
உருண்டு விளையாடுதம்மா நாகபூசணி
மூன்று தலை நாகம் அம்மா நாகபூசணி
முன்னின்று ஆடுதம்மா நாகபூசணி
ஐந்து தலை நாகம் அம்மா நாகபூசணி
கொஞ்சி விளையாடுதம்மா நாகபூசணி
ஏழு தலை நாகம் அம்மா நாகபூசணி
எழுந்து நின்று ஆடுதம்மா நாகபூசணி
பத்துத் தலை நாகம் அம்மா நாகபூசணி
பதுங்கி விளையாடுதம்மா நாகபூசணி
வாழ்த்தி வரம் கொடம்மா நாகபூசணி
வாள் உருவிக் கை கொடம்மா நாகபூசணி
போற்றி வரம் கொடம்மா நாகபூசணி
பொற்சிலம்பு கை கொடம்மா நாகபூசணி

# வீரமாகாளி துதி

மலைக்கு மலை நடுவே வீரமாகாளி
மலையாள தேசம் அம்மா வீரமாகாளி
மலையாள தேசம் எல்லாம் வீரமாகாளி
விளையாடப் பெண் பிறந்தாய் வீரமாகாளி
தேசாதி தேசமெல்லாம் வீரமாகாளி
திருநடனம் ஆடி வாறா வீரமாகாளி
ஊரு விட்டு ஊருசென்று வீரமாகாளி
ஊழிக்கூத்து ஆடி வாறா வீரமாகாளி
இந்த நல்ல வேளையிலே வீரமாகாளி
எமக்குத் துணை வந்திடம்மா வீரமாகாளி
நடனம் நடனம் என்று வீரமாகாளி
நடனக் கலை தான் எடுத்தாள் வீரமாகாளி
முத்தோ மௌள மௌளன வீரமாகாளி
மோதிரக் கால் ஜோதி மின்ன வீரமாகாளி
பட்டோ பள பளென வீரமாகாளி
பாவாடைக் கால் ஜோதி மின்ன வீரமாகாளி
எடுத்து வைக்கும் கால்களுக்கோர் வீரமாகாளி
எருக்கலம் பூச் சல்லடமாம் வீரமாகாளி
தூக்கி வைக்கும் கால்களுக்கோர் வீரமாகாளி
துளசிப் பூச் சல்லடமாம் வீரமாகாளி
மாறி வைக்கும் கால்களுக்கோர் வீரமாகாளி
மாதாளம் பூச் சல்லடமாம் வீரமாகாளி
கும்பத்து அழகி அல்லோ வீரமாகாளி
கோபாலன் தங்கையராம் வீரமாகாளி
குழந்தை குறை தீர்க்க வென்று வீரமாகாளி

கோயிலிலே குடியிருந்தாள் வீரமாகாளி
மக்கள் குறை தீர்க்க வென வீரமாகாளி
மகாராசி பெண் பிறந்தாள் வீரமாகாளி
சந்தனப் பலகையிலே
சதுராடி வாறாவாம்
குங்குமப் பலகையிலே
கூத்தாடி வாறாவாம்
சரணம் சரணம் என்று
சரணடைந்தோம் திருவடியில்

## வீரமாகாளி தாலாட்டு

முந்தித் தவமிருந்து - காளியம்மா - நாங்கள்
முந்நூறு நாள் தான் சுமந்து
அந்தி பகல் இரவு வேளை - காளியம்மா - நாங்கள்
அனு தினமும் சிவனை வேண்டி
போன போன நல்ல கோயில் எல்லாம் காளியம்மா
நாங்கள் பூ எடுத்து நேர்த்தி செய்து
கல்லு வைத்த கோயில் எல்லாம் காளியம்மா
நாங்கள் கை எடுத்தோ நேர்த்தி செய்து
துளிர்த்த நல்ல மரங்கள் எல்லாம் காளியம்மா
நாங்கள் கோயில் என்றோ பூசை செய்து
மூன்று குடம் முழுகி - காளியம்மா - நாங்கள்
முக்கண்ணனைப் பூசை செய்து
நான்கு குடம் முழுகி - காளியம்மா - நாங்கள்
நாராயணன் தாள் பணிந்து
ஐந்து குடம் முழுகி - காளியம்மா - நாங்கள்
ஐங்கரனைப் பூசை செய்து

ஆறு குடம் முழுகிக் - காளியம்மா - நாங்கள்
ஆறுமுகன் தான் பணிந்து
ஏழு குடம் முழுகிக் - காளியம்மா - நாங்கள்
ஏழிழையாய் தான் பணிந்து
ஒன்பது குடம் முழுகிக் - காளியம்மா - நாங்கள்
ஓம் என்ற நாமம் சொல்லிப்
பத்துக் குடம் முழுகிக் - காளியம்மா - நாங்கள்
பத்தினியை பூசை செய்து
நொந்து பெற்ற பிள்ளையம்மா தாயாரே - நீயும்
நோக விட வேண்டாமம்மா
வருந்திப் பெற்ற பிள்ளையம்மா - காளியம்மா
வருந்த விட வேண்டாமம்மா
மலடி என்று சொல்லாமலே - காளியம்மா அந்த
ஈஸ்வரனார் தந்த பிள்ளை
நாட்டிலுமோ பொன்னினாலே காளியம்மா - அதன்
தொடுகயிறோ முத்தினாலே
தொட்டிலுமோ ஆடி வரக் - காளியம்மா - அங்கு
தோழமைமார் ஆயிரம் பேர்
முத்துச் தங்கத் தொட்டிலிலே - காளியம்மா உன்னை
முதல் மகளாய் தாலும் ஆட்ட
தங்க வெள்ளித் தொட்டிலிலே - காளியம்மா உன்னை
தலை மகளாய்த் தாலும் ஆட்ட
தால் ஆட்டத் தாலும் ஆட்ட - காளியம்மா - அங்கு
தாதியர்மார் ஆயிரம் பேர்
ஆராரோ ஆரிவரோ - காளியம்மா - அவர்
ஆரிரரோ ஆரிரரோ

# முதலி அம்பாள் துதி

இந்த நல்ல வேளையிலே தாயே முதலி அம்பாள்
எமக்குத் துணை வந்திடம்மா தாயே முதலி அம்பாள்
கையாலே பூ எடுத்தால் தாயே முதலி அம்பாள்
காம்பழுகிப் போகுமென்று தாயே முதலி அம்பாள்
மதியாலே பூ எடுத்தால் தாயே முதலி அம்பாள்
மலர் வாடிப் போகுமென்று தாயே முதலி அம்பாள்
தோட்டம் திறந்தல்லவோ தாயே முதலி அம்பாள்
தென்னை கட்டிப் பூ எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
தங்கத்தாலே கொக்கை கட்டித் தாயே முதலி அம்பாள்
தகுந்த மலர் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
வெள்ளியாலே கொக்கை கட்டித் தாயே முதலி அம்பாள்
வேண்டும் மலர் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
அத்தலரி கொத்தலரி தாயே முதலி அம்பாள்
அடுக்கலரிப் பூ எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
செக்கச் சிவந்த நிற தாயே முதலி அம்பாள்
செவ்வந்திப் பூத் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
வண்டு, தும்பி நாடாத தாயே முதலி அம்பாள்
வண்ண மலர் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
தண்ணீரிலே பூத்த நல்ல தாயே முதலி அம்பாள்
தாமரைப் பூத் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
சேற்றினிலே பூத்த நல்ல தாயே முதலி அம்பாள்
செந்தாமரைப் பூ எடுத்தோம் தாயே முதலி அம்பாள்

முந்தி மலர்ந்த மலர் தாயே முதலி அம்பாள்
முன் மலரைத் தள்ளி வைத்தோம் தாயே முதலி அம்பாள்
பிந்தி மலர்ந்த மலர் தாயே முதலி அம்பாள்
பின் மலரைத் தள்ளி வைத்தோம் தாயே முதலி அம்பாள்
நடுவே மலர்ந்த மலர் தாயே முதலி அம்பாள்
நல்ல மலர் தான் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
ஓடி வரும் கங்கையிலே - தாயே முதலி அம்பாள்
ஒரு செம்பு நீர் எடுத்தோம் - தாயே முதலி அம்பாள்
பாய்ந்து வரும் கங்கையிலே - தாயே முதலி அம்பாள்
பக்கச் செம்பால் நீர் எடுத்தோம் - தாயே முதலி அம்பாள்
தமும்பி வரும் கங்கையிலே - தாயே முதலி அம்பாள்
தங்கச் செம்பால் நீர் எடுத்தோம் தாயே முதலி அம்பாள்
பாதம் கழுவி அல்லோ - தாயே முதலி அம்பாள்
பட்டால் அடி துடைத்தோம் தாயே முதலி அம்பாள்
வாரி வந்த பூ அதனைத் தாயே முதலி அம்பாள்
வள வளவென தான் சொரிந்தோம் தாயே முதலி அம்பாள்
எடுத்து வந்த பூ அதனைத் தாயே முதலி அம்பாள்
இன்பமுடன் தான் சொரிந்தோம் தாயே முதலி அம்பாள்
ஆய்ந்து வந்த பூ அதனைத் தாயே முதலி அம்பாள்
அன்புடனே தான் சொரிந்தோம் தாயே முதலி அம்பாள்
பொற்சுருவம் தான் எடுத்து தாயே முதலி அம்பாள்
பொங்கல் உலை வார்த்து வைத்தோம் தாயே முதலி அம்பாள்
பயறு கலந்தரிசி தாயே முதலி அம்பாள்
பக்குவமாய் பொங்கல் செய்து தாயே முதலி அம்பாள்

எள்ளுக் கலந்தரிசி தாயே முதலி அம்பாள்
இன்பமுடன் பொங்கல் செய்து தாயே முதலி அம்பாள்
காய் மடையாம் பூ மடையாம் தாயே முதலி அம்பாள்
கன மடைதான் நாம் படைத்தோம் தாயே முதலி அம்பாள்
பால் பழங்கள் நாம் படைத்தோம் தாயே முதலி அம்பாள்
பக்குவமாய் உந்தனுக்கு தாயே முதலி அம்பாள்
பலகார வகைகளுமாம் தாயே முதலி அம்பாள்
படையலிலே சேர்த்துக் கொண்டோம் தாயே முதலி அம்பாள்
கட்டோடு வெத்திலையாம் தாயே முதலி அம்பாள்
கமுகோடு இளம் பாக்காம் தாயே முதலி அம்பாள்
ஈனாத வாழையிலே தாயே முதலி அம்பாள்
இடைக்கதலி தேன் பழமாம் தாயே முதலி அம்பாள்
வேரில் முழைத்ததொரு தாயே முதலி அம்பாள்
வெடியல் பலாப்பழமாம் தாயே முதலி அம்பாள்
பாலால் அபிஷேகம் தாயே முதலி அம்பாள்
பத்தினிக்கு நாங்கள் செய்தோம் தாயே முதலி அம்பாள்
தேனால் அபிஷேகம் தாயே முதலி அம்பாள்
தேவியர்க்கு நாங்கள் செய்தோம் தாயே முதலி அம்பாள்
முடியோடு மூன்று இளனி தாயே முதலி அம்பாள்
படியேறி நாம் உடைத்தோம் தாயே முதலி அம்பாள்
வெட்டி வைத்த செவ்விளனீர் தாயே முதலி அம்பாள்
ஆயிரமாம் தான் குவியல் தாயே முதலி அம்பாள்
பூசை நடக்குதம்மா தாயே முதலி அம்பாள்
புனிதமுள்ள ஆலயத்தில் தாயே முதலி அம்பாள்

தீபம் எரியுதம்மா தாயே முதலி அம்பாள்
திருக்கோயில் வாசலிலே தாயே முதலி அம்பாள்
கற்பூர வாசனையாம் தாயே முதலி அம்பாள்
கமறி மணம் கொள்ளுதம்மா தாயே முதலி அம்பாள்
சாம்பிராணி வாசனையாம் தாயே முதலி அம்பாள்
சந்தன மணம் கொள்ளுதம்மா தாயே முதலி அம்பாள்
குங்குமப் பூ வாசனையாம் தாயே முதலி அம்பாள்
குமுறி மணம் கொள்ளுதம்மா தாயே முதலி அம்பாள்
ஏனோதான் தாமதங்கள் தாயே முதலி அம்பாள்
எழுந்தோடி வாவனம்மா தாயே முதலி அம்பாள்
கும்பம் கலைய முன்னே தாயே முதலி அம்பாள்
குதித்தோடி வாவனம்மா தாயே முதலி அம்பாள்
இல்லை என்பர் வாசலிலே தாயே முதலி அம்பாள்
இருள் விளக்காய் நின்று ஒளிர்வாய் தாயே முதலி அம்பாள்
உண்டு என்பர் வாசலிலே தாயே முதலி அம்பாள்
ஒளி விளக்காய் நின்று ஒளிர்வாய் தாயே முதலி அம்பாள்
கதவடைத்தார் வாசலிலே தாயே முதலி அம்பாள்
காற்றாகப் போய் நுழைவாய் தாயே முதலி அம்பாள்
மலை மீது போனாலும் தான் தாயே முதலி அம்பாள்
மன ஏங்கிப் காத்திடம்மா தாயே முதலி அம்பாள்
கடல் மீது போனதும் தாயே முதலி அம்பாள்
கருணை கொண்டு காத்திடம்மா தாயே முதலி அம்பாள்
துறை மீது போனாலும் தான் தாயே முதலி அம்பாள்
துணை நின்று காத்திடம்மா தாயே முதலி அம்பாள்
படுத்து உறங்கும் வேளையிலே தாயே முதலி அம்பாள்
பக்கத்திலே துணை இரம்மா தாயே முதலி அம்பாள்
கண்ணயரும் வேளையிலே தாயே முதலி அம்பாள்
காவலாக நின்றிடம்மா தாயே முதலி அம்பாள்.

## அம்மன் பாடல்

தாயே மகா சக்தி எங்கள் தாயே மகா சக்தி

கதறிடும் எங்களின் கடிவினை களைத்திடக்

காரிகையானவளே அம்மா காரிகை ஆனவளே

சிவ சிவ சிவசக்தி வரம் தினம் அருள் ஜெய சக்தி

குருவடிவானவளே எங்கள் குறைகளைத் தீர்த்தருளே

கடல்போல் துயர் நடுவே எம்மைக் காக்கவென உதித்தவளே

தாயே மகா சக்தி

உறவினர் உதவி இல்லை எமக்கு உதவிட யாருமில்லை

நாம் படுகின்ற துயரம் அதை

உந்தன் பார்வையால் தீருமம்மா.... தாயே மகா சக்தி

அணைத்திட ஒருவரில்லை எமக்கு ஆறுதல் அளிப்பாரில்லை

அன்னையே உன்னை அல்லால் எமக்கு

ஆறுதல் அளிப்பவர் யார்.... தாயே மகா சக்தி

பாடிடும் எங்கள் முன்னே நீயும்

பறந்தோடி வாருமம்மா

ஓடியே வந்து நின்று - எங்கள்

உறுபிணி தீருமம்மா..... தாயே மகா சக்தி

அன்னையே அன்னையே என்று - நாம்

அலறுவது தெரியலயோ

பரிவுடன் ஓடி வந்து - இந்தப்

பாவிகளைக் காத்திடம்மா.... தாயே மகா சக்தி.

## அம்மன் பாடல்

அன்னையிடம் ஓடி வாருங்கள் - அவள்
ஆலயத்தில் ஒன்று கூடுங்கள்
உள்ளக் குறை சொல்லி அழுங்கள் - அவள்
துள்ளி வந்து தீர்த்து அருள்வாள்

அழகான மலரெடுத்து மாலை தொடுங்கள் - அதை
அன்புடனே சூட்டி நின்று அழகு பாருங்கள்
பக்தியுடன் ஒன்று சேர்ந்து பஜனை பாடுங்கள்
சக்தி ஓடிவந்து நின்று காட்சி தருவாள்

அன்னை அன்னை என்று சொல்லி அழுது நில்லுங்கள்
அனுதினமும் ஆடிப் பாடி அவளைப் போற்றுங்கள்
கன்றின் குரல் கேட்ட அந்தத் தாய்ப்பசுவைப் போல்
கதறிக்கொண்டு எங்கள் முன்னே ஓடிவாருங்கள்
முதலி அம்மன் வாசலுக்கு வந்து சேருங்கள்
வாண்மையுடன் அவள் பெயரைக் கூவி அழையுங்கள்
வஞ்சி வடிவாக இங்கு வீற்றிருப்பவள்
அஞ்சுதலை நீக்கிடவே ஓடி வருவாள்

எல்லாரும் எமது மக்கள் என்று கூறுவாள்
ஏற்றத்தாழ்வு எம்மிடையே காட்டிட மாட்டாள்
உற்ற பிணிகள் அனைத்தும் உணர்த்திக் காட்டுவாள்
குற்றங்கள் எம்மைக் குணமுறச் செய்வாள்
அன்னையிடம் ஓடி வாருங்கள்.

## அம்மன் பாடல்

மல்லாகம் பதி முதலி அம்மா - உன்னைத்
துதிப்போர்க்குத் துன்பமெல்லாம் தீருமம்மா
மங்கையர் மனதினிலே இன்பமம்மா - அவர்
மாங்கல்யம் நிலைத்திடவே அருள் புரிவாய்

ஆயிரம் கரமுடைய சுந்தரியே - உந்தன்
ஆலயம் வருவோர்க்கு மங்களமே
வாழ்வினிலே ஐஸ்வர்யம் தருபவளே - உன்னை
அனைவரும் வணங்க வழி செய்தவளே

பாவியர்கள் செய்த பிழை பொறுப்பவளே - இந்தப்
பாதிடத்தை மீண்டும் வர வைத்தவளே
சூலமொடு வாழும் கையில் எடுப்பவளே - தனியே
சோதியாய் எங்கள் முன்னே தெரிபவளே

ஈழமண்ணைத் தலைதனிலே சுமப்பவளே - இங்கு
ஈழ மக்கள் வாழ வழி வகுத்தவளே
பத்தினியாய் கோலம் கொண்டு வந்தவளே
எங்கள் பசிப்பிணியைக் போக்கு வல்ல பார்பதியே
எங்கள் பசிப்பிணியைக் போக்கு வல்ல பார்பதியே

புலித்தோல் உடுத்தல்லவோ ஆதி சிவனாரும்
போதவராய் வேடம் கொண்டார் மாய சிவனாரும்
கரித்தோல் உடுத்தல்லவோ மாய சிவனாரும்
காரணமாய் வேடம் கொண்டார் மாய சிவனாரும்
சூலாயுதம் தான் எடுத்தோர் ஆதி சிவனாரும்
சுழட்டி வழி தான் நடந்தார் மாய சிவனாரும்
வேலாயுதம் தான் எடுத்தோர் ஆதி சிவனாரும்

விரட்டி வழி தான் நடந்தார் மாய சிவனாரும்
வெள்ளை வரிந்து கட்டி ஆதி சிவனாரும்
வெண்ணீறும் பூசிக் கொண்டார் மாய சிவனாரும்
நாத வடிவானவராம் ஆதி சிவனாரும் - தில்லை
நடனமாடும் தலைவனல்லோ மாய சிவனாரும்
வேத வடிவானவராம் ஆதி சிவனாரும்
வேண்டும் வரம் தந்திடப்பா மாய சிவனாரும்
சந்தனத்தால் பொட்டும் வைத்து ஆதி சிவனாரும்
குங்குமத்தால் பொட்டும் வைத்து ஆதி சிவனாரும்
கூத்தாடி வாறாராம் மாய சிவனாரும்

## கண்ணன் பாடல்

ஓம் நமோ நாராயணா கோவிந்த கோபாலா
ஓம் நமோ நாராயணா கோவிந்த கோபாலா
காக்கைச் சிறகினிலே கோவிந்த கோபாலா
உந்தன் கரிய நிறம் தோதல்லோ கோபாலா
பார்க்கும் இடத்தில் எல்லாம் கோபாலா
கேட்கும் ஒலியில் எல்லாம் கோபாலா
உந்தன் கீதம் இசைக்குதல்லோ கோபாலா
பாற்கடலில் பள்ளி கொள்ளும் கோபாலா
அந்த பரந்தாமன் நீயல்லவோ கோபாலா
ஆல் இலையில் பள்ளி கொள்ளும் கோபாலா
அந்தக் கரிராமன் நீ அல்லவோ கோபாலா
பாம்பறையில் பள்ளி கொள்ளும் கோபாலா
அந்தப் பரசு ராமன் நீயல்லவோ கோபாலா
ஐந்து வயதினிலே கோபாலா
நீயும் ஆடு மேய்க்கும் இடையனாவாய் கோபாலா
ஆறு வயதினிலே கோபாலா
ஏடு எடுத்து எழுத்தறிந்தாய் கோபாலா
எழு வயதினிலே கோவிந்த கோபாலா
எழுத்தாணி எழுத்தவனாம் கோபாலா
குறை ஒன்றும் இல்லாமலே கோவிந்த கோபாலா
நிறைவான அருள் தருவாய்.

# அம்மன் வீதி உலா

ஆதி பரமேஸ்வரியே வீதி வலம் வருகின்றாள்
முதலி அம்மன் தாயாரும் காட்சியைத் தருகின்றாள்
இன்பமாய் நாம் வாழ வீதிவலம் வருகின்றாள்
இன்னல்களைத் தீர்த்திடவே ஓடி வலம் வருகின்றாள்
ஓங்கார நாயகியே ஓடி வலம் வருகின்றாள்
அபிநய சுந்தரியே ஆடி வலம் வருகின்றாள்
சின்னச் சின்ன நடை நடந்து வீதி உலா வருகின்றாள்
சிங்கார நடை போட்டு வீதி வலம் வருகின்றாள்
வினை தீர்க்க வந்தவளே வீதி உலா வருகின்றாள்
வெற்றிகாணக் களிப்புடனே ஆடி வலம் வருகின்றாள்
துன்புறும் நேரத்திலே வீதி வலம் வருகின்றாள்
துன்பத்தை துடைத்திடவே துர்க்கையே வருகின்றாள்
படைவாளைக் கைக்கொண்டு பத்தினியே வருகின்றாள்
பாரிலே போர் தொடுக்கப் பார்பதியே வருகின்றாள்
அச்சத்தை போக்க வல்ல அம்பிகையே வருகின்றாள்
அடியவர் புடைசூழ ஆடி வலம் வருகின்றாள்
மதுரையில் மீனாட்சி வீதி வலம் வருகின்றாள்
மக்களைக் காத்திடவே ஓடி வலம் வருகின்றாள்
ஆதிபரமேஸ்வரியே வீதி வலம் வருகின்றாள்
முதலி அம்மன் தாயாரும் காட்சியைத் தருகின்றாள்.

## காப்பு

ஓரனை கண்ணே கண்ணே
எங்கள் உமையாள் பெற்ற பாலகனார்
ஈரனைக் கண்ணே கண்ணே
எங்கள் ஈஸ்வரியே நீ துணையாம்
மூவனைக் கண்ணே கண்ணே
முக்கண்ணனார் தன் மகனாம்
நான்கனைக் கண்ணே கண்ணே
நாக கன்னித் தாயாருமாம்
ஐந்தனைக் கண்ணே கண்ணே
ஐங்கரனார் உன் மடியில்
ஆறனைக் கண்ணே கண்ணே
ஆறுமுக வேலவராம்
ஏழனைக் கண்ணே கண்ணே
ஏழிழையாள் மாரியாம்
எட்டனைக் கண்ணே கண்ணே
எட்டுத் திக்கும் காரேன் அம்மா
ஒன்பதனைக் கண்ணே கண்ணே
ஓங்கார நாயகியே
பத்தானைக் கண்ணே கண்ணே
பராசக்தி காரேன் அம்மா
காக்கப் பிறந்தவளே - எங்கள்
காரிகையே காரேன் அம்மா
ஆழப்பிறந்தவளே - எங்கள்
ஆத்தாளே காரேன் அம்மா
நோய் நொடிகள் அணுகாமல் - தாயே
நுட்பமுடன் பாரேன் அம்மா
ஈழை இருமலுடன் - தாயே
இழுப்பு வலி வந்திடாமல்

காய்ச்சலுடன் தடிமல் தாயே
கை உளைவு நாரிக்குத்து
சின்னமுத்து ஒரு கொப்பளிப்பான்
சிதறி முத்து எறிந்திடாமல்
அம்மையுடன் கொப்பளிப்பான்
அணுகாமல் காத்திடம்மா
ஈச்சம்பழச் சாயலைப்போல் - தாயே
இழைய முத்து எறிந்திடாமல்
நாவல் பழச் சாயலைப்போல் - தாயே
நாவல் முத்து எறிந்திடாமல்
வரகு அரிசிச் சாயலைப்போல் - தாயே
வாயில் முத்து எறிந்திடாமல்
பண்ணைப் பழமது போல் - தாயே
பருத்த முத்து எறிந்திடாமல்
காப்பதமே காப்பதமே - எங்கள்
பிள்ளையாருக்கு ஒரு காப்பதமே
காப்பதமே காப்பதமே - எங்கள்
முதலி அம்மன் தாயாருக்கும்
காப்பதமே காப்பதமே - எங்கள்
வீரமகா காளித் தாயாருக்கும்
காப்பதமே காப்பதமே - எங்கள்
நாக கன்னித் தாயாருக்கும்
காப்பதமே காப்பதமே - எங்கள்
கண்ணகை அம்மன் காப்பதமே
காப்பதமே காப்பதமே - எங்கள்
பூதி அனுமான் அந்நதனுமாம்
காப்பதமே காப்பதமே - எங்கள்
வீரபத்திர தேவருக்கும்
காப்பதமே காப்பதமே - எங்கள்
காவல் தெய்வம் வைரவர்க்கும்.

## பராசக்தி பாடல்

இராகம்:- வர்ண மெட்டு தாளம்:- ஆதி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைத்தாய்
ஆதாரம் உன்னையல்லாமல் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழி நீ சொல்வாய் எனதுயிரே
வேதாயின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போல அறிவுமுத்து மாலையினால்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
வானுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

பொன்னாசி நாரணனார் தேவி புகழாசி
மின்னும்நவரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
பன்னிரு பொற்தாளே சரண்புகுந்து வாழ்வோமே

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாய்
நிலையிலே உயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கி தரணி மிசை வாழ்வோமே.

# பத்திரகாளி பாடல்

இராகம்:- பகுதாரி                                                  தாளம்:- ஆதி

**பல்லவி**

உன்னுடைய பார்வை ஒன்றே உறுதுணையாய் வருகுதம்மா
கும்மிருட்டுப் பாதையிலே பேரொளியாய் தெரியுதம்மா

**அனுபல்லவி**

என்னுடைய ஆட்டமெல்லாம் நீ அமைத்த மேடையிலே
அசைவதுவும் இசைவதுவும் நின் கடைக்கண் சாடையிலே - உன்

**சரணம்**

சிற்றிடையில் சிவந்த பட்டு திருக்கரத்தில் திரிசூலம்
நெற்றியிலே செந்தூரம் நீர் விழியில் கருணைமழை
தெல்லி நகர் துர்க்கையம்மா உன்னழகைப் பார்ப்பதற்கு
என்முகத்தில் அமைந்திருக்கும் இருவிழியால் இயன்றிடுமோ - உன்

சிங்கத்திலே நீ வந்து சிறிய எம்மைக் காத்திடுவாய்
எங்கள் பல குறையனைத்தும் ஈன்றவளே நீயறிவாய்
சிறியேன் அழைத்தகுரல் திருச்செவியில் ஏற்றருள்வாய்
அறிவேதுமில்லாத என் அன்பு மொழி கேட்டிடுவாய் - உன்

அம்பிகையே உலகீன்ற ஆரணியே காரணியே
செம்பவள மேனியளே சிவக்கொழுந்தே வந்தருள்வாய்
அருவாகி உருவாகி ஐம்பூதப் பொருளாகி
துணையாகி எமைக்காக்கும் துர்க்கையம்மா வந்தருள்வாய் - உன்



# கௌரி காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
எண்ணின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையனைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்று படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காத்தருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே

ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே

காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்

நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா

காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே

காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்

சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே

குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா

காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்

பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்

காலைப்பொழுதெழுந்து காப்பதில் விழித்திடுவேன்

ஞானச்செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்

காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்

ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்

தீமைச்செயலெதுவும் கண்திறந்து காட்டுமம்மா

சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை

இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமிரு

தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்பு கையிருந்து கண்திறந்து காட்டுமடி

பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு

இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்

கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்

முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே

காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# லிங்கா அஷ்டகம்



இராகம்:- யமுனாகல்யாணி தாளம்: ஆதி

ப்ரஹ்ம முராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜனமஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவராச்சித லிங்கம்
காமதஹ்ம கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் பரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுஸராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணாமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பராமார்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூர்உடவர்தம் கை

விநாயகனே வெவ்வினைய வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் களிற்து.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் - அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தான்
நண்ணுவதும் நல்லார் கடன்.



உ

சிவமயம்

மல்லாகம் பூதப்பிள்ளை வளவிலுறை

முதலியம்மன்

# ஊஞ்சல் பாடல்

பார்பூத்த ஈழவளநாடதனில் வடபாகத்தில்
சீர்பூத்த யாழ்ப்பாண நன்னகரில்
பேர்பூத்த பெரியமறையாளர் வாழும்
மார்பூத்த மகிமைபெறு மல்லாகத்தில்
நீர் கோத்து நின்று நிரவிப் பாயும்
ஊர்பூத்த பூதப்பிள்ளை வளவிலுறை
முதலியம்மாதன்மேல் ஊஞ்சலிசைபாட
கார் பூத்த கரிமுகத்து கணபதியே காப்பாயே. 01

ஓதரிய நான்குமறை தூண்களாக
ஒப்பரிய திருமுறையே நாண்களாக
மேதகு தமிழிசையாம் விட்டம் பூட்டி
மேன்மைதரு ஊஞ்சலினை இனிதாய் மாட்டி
போதவிழ்த மலர்மாலை பொலியத்தூக்கி
பொற்புறச் சமைத்த தொரு ஊஞ்சல் மேவி
சீதவள வயல் மருவும் பூதப்பிள்ளை வளவில்
சிறப்புடனே முதலியம்மா ஆடீர் ஊஞ்சல். 02

இரு மருங்கும் வெண்கவரி சாமரைகள் சாய
இதமான தூபமொடு அகிற் புகையும் வீச
பெருமை யொடு சூரியனும் மேற்திசையில் பாய
பேரிருளை சந்திரனும் தாரகையும் மேவ
விருப்பினொடு அடியவர்கள் பாதமலர் சூட
விந்தைபல புரிய வென்று ஊஞ்சல்மிசை ஏறி
திருத் திகளும் மரத்தடியில் பொருந்தி நடமாடும்
பெரியவளே முதலியம்மா ஆடீர் ஊஞ்சல். 03

காதலொடு பாடும் தமிழ் கான மழையாக
கட்டிய உடுக்கை ஒலி வான இடியாக
நாதஸ்சுர ஓசை எழுந்தாரபியில் பாட
நாட்டிய மடந்தையர்கள் கூடி நடமாட
வேத ஒலி விண்ணெழுந்து மேலுலகுசேர
வேப்பிலையை வீசிடுவாய் வினைகள் எல்லாம் தீர
ஆதரவு தேடி வந்தோம் பூதப்பிள்ளை வளவின்
முன்னவளே முதலியம்மா ஆடீர் ஊஞ்சல். 04

பொங்கு சடை பூமலிந்து மகுடம் ஆட
பூத கண நாதரெலாம் கீதம் பாட
எங்குறை தீர் முதலியம்மா என்று உளமார
நின்று தமிழ் பாட மடவர்கள் நடமாட
தங்கு தடை இன்றி வந்த பிணி ஓட
தரணி எல்லாம் அம்பிகையே நின் கருணை மேவும்
தெங்குமலி பூதப்பிள்ளை வளவுறையும் தாயே
புங்கவியே எங்கள் முன்னே ஆடீர் ஊஞ்சல். 05

நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவமிருந்தோம்
நேரிய கண்மணியே உன்னை நினைந்தறியோம்
தீராத நோய்களெல்லாம் தீர்த்திடுவாய் என்று
நேராக ஓடிவந்து சரணடைந்தோம் தாயே
ஆறாத ஆவலொடு சாரங்கா பாடி
ஆதரிப்பாய் முதலியம்மா என்று உனை நாடி
மாறாத கருணையோடு பூதப்பிள்ளை வளவில்
முதலியம்மா நீ அமர்ந்து ஆடீர் ஊஞ்சல். 06

பசப்பினொடு சர்க்கரைசேர் சுவையான அமுதும்
பால் தயிரும் போனகமும் பசு நெய்யும் தேனும்
கரும்பிலுறு சாறும் செவ்விளனி நீரும்
களங்கமிலாக் கனிகளெல்லாம் கலந்ததொரு பாகும்
விருப்புள பொரிக்கறியும் சிவத்தரிசிச் சோறும்
விதம் விதமாய் பணிகாரம் பலவும் முன் வைத்தோம்
திருமருவு மல்லாகம் பூதப்பிள்ளை வளவின்
பெரியவளே முதலியம்மா ஆடீர் ஊஞ்சல். 07

சிந்தை நிறைந்தவளே ஆடீர் ஊஞ்சல்
சிவனருகில் அமர்ந்தவளே ஆடீர் ஊஞ்சல்
முந்தை வினை அறுப்பாய் ஆடீர் ஊஞ்சல்
முவுலகும் காத்தருள்வாய் ஆடீர் ஊஞ்சல்
எந்தை விநாயகனை எமக்களித்த அம்பிகையே
ஏறி இனிதமர்ந்து ஆடீர் ஊஞ்சல்
சிந்து பைரவியே சிம்ம வாகினியே
சித்தம் குளிர வந்து ஆடீர் ஊஞ்சல் 08

வேத மொடு திருமுறையும் ஓதி வாழி
திருநீறும் ஐந்தெழுத்தும் திகழ்ந்து வாழி
காதலொடு பூசை செய்யும் அடியார் வாழி
கற்பு நெறிதவறாத மாதர் வாழி
மாத மழை தவறாது பொழிந்து வாழி
மாறாத நீதி நெறி நிலைத்து வாழி
பூதப்பிள்ளை வளவிலுறை முதலியம்மா புகழ்
எஞ்ஞான்றும் வாழி வாழி. 09

நீர் பெருகு நீலியம்பனைப் பதிக்கு அன்னையே எச்சரீக்கை
பேரரிய பெரியதம்பிரான் தேவி எச்சரீக்கை
கூர்மருவு வேலவற்கு அன்னையே எச்சரீக்கை
குருவாகி வந்து எம்மை ஆழ்வாய் எச்சரீக்கை
பாருயர்ந்த பாதியென நின்றாய் எச்சரீக்கை
பரமசிவன் பாதியென நின்றாய் எச்சரீக்கை
சீர் பெருகு சிறப்பினொடு பூதப்பிள்ளை வளவிலுறை
முதலியம்மா உந்தனுக்கு என்னும் எச்சரீக்கை. 10

எங்கும் நிறைந்த இறைவி பராக்கு
எண்ணிய அன்பர்க்கு இனியாய் பராக்கு
தங்கு சிவமூர்த்தமதில் பாதி நீ பராக்கு
எங்களையும் ஆழுகின்ற நீதி நீ பராக்கு
சிங்கத்தை வாகனமாய் கொண்டாய் பராக்கு
சிறப்பாக நோய்களெல்லாம் தீர்ப்பாய் பராக்கு
சங்கார கோலமதில் காளி நீ பராக்கு
சங்கரியே முதலியம்மா உந்தனுக்கு பராக்கு. 11

எல்லாம் அறிந்தவளே லாலி லாலி

எங்கும் நிறைந்தவளே லாலி லாலி

கல்லாகி நின்றவளே லாலி லாலி

கற்பகமே உந்தனுக்கு லாலி லாலி

சொல்லாமல் உனைப்பாட லாலி லாலி

துணையாக நின்றவளே லாலி லாலி

மல்லாகம் பதியினிலே லாலி லாலி

முதலியம்மா உந்தனுக்கு லாலி லாலி. 12

முக்கண்ணனாம் மூர்த்தியர்க்கு மங்களம் மங்களம்

மூத்தவனாம் கணபதிக்கு மங்களம் மங்களம்

தத்துவ ஞானகுரு கந்தனுக்கு மங்களம்

தாயாகி வந்த எங்கள் அம்பிகைக்கு மங்களம்

சீறி ஒரு சிரமரிந்த வைரவர்க்கு மங்களம்

வீரமிகு வீரபத்திரர்க்கும் மங்களம்

நாவிலுறை நாயகியாய் சரஸ்வதிக்கு மங்களம்

நல்ல செல்வம் தந்தருளும் லக்குமிக்கும் மங்களம்

மல்லை நகர் வளம் பெருக வந்தவட்கு மங்களம்

மாதரசி முதலியம்மா உந்தனுக்கு மங்களம் 13

எங்கள் அருள் செல்வன் ஐயா, வாழி – வாழி

எங்கள் ஐயாவுக்கு மங்களம்

சுப மங்களம்



# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைசிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான் முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை

நானே எழுப்புவன் என்றலும் நாணாமே

போன திசைபகராய் இன்னம் புலர்ந்தி ன்றோ

வானே நிலனே பிறவே அறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்

வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்

ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்

உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ

வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாழ்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்

தீர்த்தன், நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்

கூத்தன், இவ்வானுங் குவலயமும் எல்லோமும்

காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்

ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்

ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்

அங்கக் குருகினத்தால் பின்னும் அரவத்தால்

தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்

சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்

பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்

கோதை குழலாட வண்டின் குழாமாடச்

சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி

வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்

பாதந் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவிள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாமம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

தேவஸ்தான அர்ச்சகர்
**சிவத்திரு மு. சுப்பிரமணியம்**
**அன்புச்செல்வன் (மணி ஐயா)**

நீலியம்பனை,
மல்லாகம்.

